ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2456/57 - 2025 ඔක්තෝබර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.02
2456/57 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2019, ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதிய 2117/58 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட, 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/15/2017/VE/296.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: DIK/LAN/02/61.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, செத்தெம்பர் 04.

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லபடபற்று சிறு பிரிவில்,


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வெவுருகன்னல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.11.26 ஆந் திகதிய, MR/DKW/2017/588 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு "A" - குலுகஹவத்தை அல்லது தன்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.0071ஹெக்டயார்.**

வடக்கு: ஹேவா எடேரகே பியசேன உரிமை கோரும் தெனியவத்தை மற்றும் துண்டு B; கிழக்கு: துண்டு B; தெற்கு: வீதி; மேற்கு: வீதி.

**02. துண்டு "B" - குலுகஹவத்தை அல்லது தன்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.5583 ஹெக்டயார்.**

வடக்கு: ஹேவா எடேரகே பியசேன உரிமை கோரும் தெனியவத்தை ; கிழக்கு: சிரிமதி முத்துகுமாரன உரிமை கோரும் தெனியவத்தை; தெற்கு: டப்ளியூ. சோமாவதி உரிமை கோரும் வெரலுகஹலந்த, வீதி மற்றும் துண்டு A; மேற்கு: துண்டு A.

EOG 10 - 0032